**பெல்மதுள்ள பிரதேச சபையின் 2026.04.07 ஆம் திகதி நடைபெற்ற பொது சபைக் கூட்டத்தின் அறிக்கை**

பெல்மதுள்ள பிரதேச சபையின் பொதுச் சபைக் கூட்டம் 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் தலைமையில் பிரதேச சபையின் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்திற்கு கீழ் பெயர் குறிப்பிடப்பட்டு உள்ள கொரவ பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

02. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.டி.டப்ளிவ். சோமரத்ன
03. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன
04. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அபேவர்தன
05. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே.ஜீ. சந்திரலால்
06. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே
07. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க
08. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர
09. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ்.ஏ. கயான் புஸ்பகுமார
10. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே. சுசன்த்த பிரேமகுமார
11. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ரீ.கே. சம்பத் சிறிசான்த்த
12. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டி.எல். யுரெஸ் புஸ்பகுமார
13. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன
14. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எம். சுலாரி சந்தரேகா மாகாவிட்ட
15. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ். இந்திக்க உதய குமார குணவர்தன
16. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க
17. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்தின
18. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி
19. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. ரீ. சிறியானி ஜானகி பீரிஸ்
20. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. இராஜரத்தினம் புவனேஸ்வரி
21. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எம். பிரதீபா இந்துமிணி குலரத்ன
22. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. வெரங்ஜா காமனி விஜேரத்தின
23. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப்ளிவ்.டப்ளிவ். மொஹான் மஞ்சுல
24. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. ஆர். திசோக்
25. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. கே. சான்த புஸ்பகுமார குடாவத்த
26. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப். ஜெகன் மோஹன்
27. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. பி. துசாரி தமயன்தி சில்வா
28. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. எச். ஞானலதா ஹப்புதன்த்திரி
29. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. மயுரி சத்துரிகா பரணமான்ன
30. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. எச்.எம். சரத் உஷான் மஹனாம
31. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திருமதி. டப்ளிவ்.எம். சிறியானி வீரசேகர
32. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் - திரு. டப். வசன்த குமாரசிறி

வருகைதந்து இருந்த அனைவரும் தமது சமய அனுட்டானங்களை பின்பற்றி, கூட்டத்திற்கு வருகைதந்து இருக்கும் கௌரவ எதிர்கட்சித் தலைவர் உட்பட ஆளும் கட்சி எதிர் கட்சி உறுப்பினர்கள் அனைவரையும், செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரையும் கௌரவ தலைவர் அவர்கள் வரவேற்றதுடன் கூட்டத்தின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

01. 2026.03.11 **பொது சபைக் கூட்ட அறிக்கை சபையில் நிறைவேற்றிக் கொள்ளல்.**

முடிவுகள் இலக்கம் 04 இன் கீழ் கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்கள் முன்வைத்த கருத்து தகனசாலை வளாகத்தில் தனியார் இறுதிக் கிரியை விழா மண்டபம் ஒன்று நிர்மாணித்தால் குறைந்த செலவில் பொது மக்களுக்கு சேவைகளை பெற்றுக்கொடுக்க முடியும் என்ற கருத்தில் தனியார் இறுதிக் கிரியை விழா மண்டபம் என்று குறிப்பிடப்பட்டது பிரதேச சபையினால் நிர்வகிக்கும் இறுதிக் கிரியை விழா மண்டபம் என்று மாற்றம் அடைய வேண்டும் என்று குறிப்பட்டார்.

மேற்குறிப்பட்ட திருத்தங்களுக்க உட்பட்டு 2026.04.07 ஆம் திகதி நடைபெற்ற பொது சபை கூட்ட அறிக்கையை சபையில் நிறைவேற்றுவது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பனர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்கள் ஆமோதித்ததன் பின்னர் ஏகமனதாக சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**02. கௌரவ தலைவர் அவர்களினால் சபைக்கு முன்வைக்க வேண்டிய அறிவித்தல்கள். – இல்லை**

**03. பிரதேச சபையின் பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமூகம் அளிக்காமை தொடர்பாக அனுமதி பெறல் சம்பந்தமான பிரேரணை –**

அவசர அறுவை சிகிச்சைக்கு உட்பட்டதன் காரணமாக வைத்திய காரணங்களினால் பொது சபை கூட்டத்திற்கு சமூகம் அளிக்க முடியாது என்று அறிவித்துள்ள கௌரவ பிரதேச சபை உப தலைவர் திரு. எச்.ஜீ. நலின் சேனக மாகம்மன மற்றும் வைத்திய காரணங்களினால் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர , கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர். தனேஸ் குமரன் அவர்களின் லீவு அனுமதிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டி.டப்ளிவ். சோமரத்ன அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி அவர்கள் ஆமோதித்தார்.

வைத்திய காரணங்களினால் பொது சபை கூட்டத்திற்கு சமூகம் அளிக்க முடியாது என்று அறிவித்துள்ள கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ.கே. சுமேத லக்மால் மற்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஜீ. இந்திக்க குமார அவர்களின் லீவு அனுமதிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க அதை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர். திசோக் அவர்கள் ஆமோதித்தார்.

04. **கௌரவ சபைக்கு அனுப்பப்பட்டுள்ள நினைவுக்குறிப்புக்கள், பொதுமக்களின் புகார்கள், முறைப்பாடுகள் பொது சபைக்கு முன்வைத்தல் :- இல்லை**

**05. உரிய முறையில் காலம் வழங்கப்பட்டு உள்ள பிணக்குகள் :- இல்லை**

**06. உரிய முறையில் காலம் வழங்கப்பட்டு உள்ள பிரேரணைகள்**

1. **கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்களின் பிரேரணைகள்**

1. தற்போது காணப்படும் எரிபொருள் தட்டுப்பாடு நிலமை மற்றும் எங்கள் நிறுவனத்தின் நிதி நிலமைகளை கருத்தில் கொண்டு பெகோ இயந்திரத்தை பொது வேலைகளுக்கு வழங்கும் போது செலவாகும் எரிபொருளை விண்ணப்பதாரர் வழங்க வேண்டும் என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 01**

தற்போது காணப்படும் எரிபொருள் தட்டுப்பாடு நிலமை மற்றும் எங்கள் நிறுவனத்தின் நிதி நிலமைகளை கருத்தில் கொண்டு பெகோ இயந்திரத்தை பொது வேலைகளுக்கு வழங்கும் போது செலவாகும் எரிபொருளை விண்ணப்பதாரர் வழங்க வேண்டும் என்று என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

02. பெல்மதுள்ள பிரதேச சபைக்கு அபாயகரமான மரங்களை அகற்றுதல் தொடர்பாக ஒப்பந்தக்காரர்களாக பிரதேச சபைக்கு சிலரை நியமித்துக் கொள்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. டப்.எம். சிறியாணி விரசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 02**

பெல்மதுள்ள பிரதேச சபைக்கு அபாயகரமான மரங்களை அகற்றுதல் தொடர்பாக ஒப்பந்தக்காரர்களாக சிலரை நியமித்துக் கொள்வது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

03. சப்ரகமுவ மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் இலக்கம் 2316/20 மற்றும் 2023 யனவரி மாதம் 24 ஆம் தியதியுமுடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு உள்ள சப்ரகமுவ மாகாணத்தில் பிரதேச சபைகள் மூலம் நடாத்திச் செல்லப்படும் வீதிகள் மற்றும் குறுகிய பாதைகளின் வரைபடங்கள் தயாரித்தல் மற்றும் பெயர் பட்டியல் தயாரித்து பிரசுரித்தல் தொடர்பான அறிவுருத்தல்களின் பிரகாரம் மற்றும் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) பிரிவின் பிரகாரம் செய்யப்பட்ட நியமங்களுக்கு உட்பட்டு 2025.01.16 அம் திகதி நடாத்தப்பட்ட பெல்மதுள்ள பிரதேச சபையின் கொள்கைகள் மற்றும் முடிவுகள் மேற்கொள்வதற்கு உதவி புரியும் கமிட்டியின் முடிவுகள் இலக்கம் 13 இன் பிரகாரம் 2025.03.01 ஆம் திகதி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு உள்ள அறிவித்தலின் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டு உள்ள பெயர்ப்பட்டியலில் குறிப்பிடப்பட்டு உள்ள வீதிகள் மற்றும் குறுகிய பாதைகள் பெல்மதுள்ள பிரதேச சபைக்கு உரித்தான வீதிகள் மற்றும் குறுகிய பாதைகள் என்பதனை உறுதிப்படுத்த வேண்டும் என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 03**

சப்ரகமுவ மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் இலக்கம் 2316/20 மற்றும் 2023 யனவரி மாதம் 24 ஆம் தியதியுமுடைய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு உள்ள சப்ரகமுவ மாகாணத்தில் பிரதேச சபைகள் மூலம் நடாத்திச் செல்லப்படும் வீதிகள் மற்றும் குறுகிய பாதைகளின் வரைபடங்கள் தயாரித்தல் மற்றும் பெயர் பட்டியல் தயாரித்து பிரசுரித்தல் தொடர்பான அறிவுருத்தல்களின் பிரகாரம் மற்றும் 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) பிரிவின் பிரகாரம் செய்யப்பட்ட நியமங்களுக்கு உட்பட்டு 2025.01.16 அம் திகதி நடாத்தப்பட்ட பெல்மதுள்ள பிரதேச சபையின் கொள்கைகள் மற்றும் முடிவுகள் மேற்கொள்வதற்கு உதவி புரியும் கமிட்டியின் முடிவுகள் இலக்கம் 13 இன் பிரகாரம் 2025.03.01 ஆம் திகதி வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு உள்ள அறிவித்தலின் அட்டவணையில் உள்ளடக்கப்பட்டு உள்ள பெயர்ப்பட்டியலில் குறிப்படப்பட்டு உள்ள வீதிகள் மற்றும் குறுகிய பாதைகள் பெல்மதுள்ள பிரதேச சபைக்கு உரித்தான வீதிகள் மற்றும் குறுகிய பாதைகள் என்பதனை உறுதிப்படுத்துவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

04. தென்மேற்கு பருவப் பெயர்ச்சி மழைவீழ்ச்சிக்கு முன் ஆயத்த நடவடிக்கையாக 2026 மே மாதம் தென்மேற்கு பருவப் பெயர்ச்சி மழைவீழ்ச்சி ஆரம்பமாகும் என்பதால் அனர்த்தங்களுக்கு உள்ளாகக் கூடிய பிரதேசங்கள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்தி அனர்த்தத்திற்கு முன் தயார் ஆவதற்கு அனர்த்த முகாமை நடவடிக்கைகளுக்கு வெளி நிறுவனங்களை உள்ளடக்கிய கமிட்டி ஒன்றை நியமிப்பது உகந்தது என்று பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், அவசர நிலமைகளில் நிறுவனம் என்ற ரீதியில் இடர் முகாமை நிறுவனம் ஒன்றாக ஈடுபடுவது எப்படி? தேவையான பொருட்கள் என்ன? மனித வளங்களை உரிய விதத்தில் பயிற்சி வழங்கி வைத்திருப்பது எப்படி? அது போன்ற அவசர நிலமைகளில் இந்த தேர்ந்து எடுக்கப்பட்ட குழுவிற்கு விசேட பயிற்சி வழங்கி பெருட்களை சேகரித்து வைத்திருப்பதற்கு தேவை உள்ளது என்பதால் நிறுவனம் என்ற ரீதியில் இடர் முகாமை குழு ஒன்றை உருவாக்குவதற்கும், ஆரம்ப கட்டமாக கமிட்டி ஒன்றை உருவாக்குவதற்கும் அந்த கமிட்டியின் பரிந்தரைகளுக்கு ஏற்ப ஏனைய வசதிகளை செய்து கொடுப்பதற்கும் எதிர்பார்ப்பதாகவும் அதன் அடிப்படையில் கமிட்டி ஒன்றை உருவாக்க வேண்டும் என்று கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இடர்களுக்கு மண் சரிவுகளுக்கு உட்படும் சில பிரதேசங்கள் உள்ளன என்பதால் இந்த பிரேரணை மிகவும் உகந்த பிரேரணை என்றும், இந்த மண் சரிவு ஏற்படும் பிரதேசங்களில் இணங்காணப்படாத பிரதேசங்கள் உள்ளன என்றும், இடர் அபாயம் உள்ள இடங்களை இணங்காண வேண்டும் என்றும், இது தொடர்பாக உரிய திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டும் என்றும், அப்போது இடர் அபாயங்களை குறைத்துக்கொள்ள முடியும் என்றும், முறையாக இடர் முகாமை கமிட்டி ஒன்றை உருவாக்குவதற்கும் கிராமத்திற்கு கிராமம் கிளை கமிட்டிகள் உருவாக்குவதற்கும், தேவையான பயிற்சி உபகரணங்கள் பெற்றுக் கொடுப்பதற்கும், ஆலோசனைகள் பெற்று பொல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மண் சரிவுகள், வெள்ளப் பெருக்குகள் போன்ற இடர் நிலமைகளின் போது பொதுமக்களை பாதுகாப்பதற்கு தேவையான வேலைத்திட்டங்களை செயல்படுத்துவோம் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இதுபோன்ற நடைமுறைக்கு முக்கியமான பிரேரணைகள் கொண்டு வருவது தொடர்பில் சபைக்கு நன்றிகளை தெரிவிப்பதாக கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், கட்சி நிற வேறுபாடுகள் இன்றி அனைவரும் ஒன்று சேர்ந்து சேவை புரிய வேண்டும் என்றும், பெல்மதுள்ள பிரதேச சபை மற்றும் பெல்மதுள்ள பிரதேச செயலகம் ஒன்று சேர்ந்து முறையான திட்டம் ஒன்றிற்கு ஏற்ப சேவைகள் ஆற்றியுள்ளன என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க அவர்கள் தெரிவித்தார்.

மு.ப. 10.30 இற்கு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. மயுரி சத்துரிகா பரணமான்ன அவர்கள் கௌரவ சபையில் இருந்து வெளியேரினார்.

கருத்து தெரிவிக்கையில், அதன் அடிப்படையில் ஆரம்ப கமிட்டியாக பிரதேச செயலகத்தில் இருந்து பிரதேச செயலாளர், நிர்வாக கிராம உத்தியோகத்தர், இடர் முகாமை உத்தியோகத்தர் மற்றும் கஹவத்தை மற்றும் பெல்மதுள்ள போலீஸ் பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர்கள், பிரதேச சபையின் உத்தியோகத்தர்களில் செயலாளர், பிரதான முகாமைத்தவ சேவை உத்தியோகத்தர், இடர் முகாமை விடய உத்தியோகத்தர், திரு. தே.ஜே. உபனந்த, திரு. ரீ.டி.கே. பெரேரா ஆகியோரை உள்ளடக்க வேண்டும் என்று கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

மு.ப. 10.30 இற்கு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர அவர்கள் கௌரவ சபைக்கு சமூகம் அளித்தார்.

மு.ப. 10.30 இற்கு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.டப். சோமரத்ன அவர்கள் கௌரவ சபையில் இருந்து வெளியேரினார்.

கௌ.பி.ச.உ. திரு. பி. நிசாந்த குமார புத்தாரச்சி, கௌ.பி.ச.உ. திரு. எச்.எம். சரத் உஷான் மஹனாம, கௌ.பி.ச.உ. திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன, கௌ.பி.ச.உ. திரு. டப்ளிவ். இந்திக்க உதய குமார குணவர்தன, கௌ.பி.ச.உ. திரு. எஸ்.எ.எஸ்.எஸ். அமரசேகர, கௌ.பி.ச.உ. திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க ஆகியோரை இந்த கமிட்டிக்கு நியமிக்க வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக அவர்கள் பிரேரிக்க, அதற்கு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக அவர்கள் தகுதியானவர் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி அவர்கள் பிரேரித்தார்.

கௌ.பி.ச.உ. திரு. திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அபேவர்தன, கௌ.பி.ச.உ. திரு. கே.ஜீ.சீ. ஜயரத்ன, கௌ.பி.ச.உ. திரு. ஏ.எப்.ஜே. சேனாரத்ன, கௌ.பி.ச.உ. திருமதி. டப்.எம்.எஸ். வீரசேகர, கௌ.பி.ச.உ. திரு. டப்.ஏ.ஜீ. புஸ்பகுமார, கௌ.பி.ச.உ. திரு. ரீ.கே.எஸ். சிறிசாந்த, கௌ.பி.ச.உ. திரு. ஏ.எம்.ஏ.எம்.ஏ.அயி.எஸ். அவகியவன்ன, கௌ.பி.ச.உ. திரு. ஆர். திசோக், கௌ.பி.ச.உ. திரு. ஆர்.எல்.அயி.ஜீ. லியனகே ஆகியோர் தகுதியானவர்கள் என்று என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. சுசன்த பிரேமகுமார அவர்கள் பிரேரிக்க, அதற்கு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. சுசன்த பிரேமகுமார அவர்கள் தகுதியானவர் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. இந்திக கயான் லியனகே அவர்கள் பிரேரித்தார்.

கருத்து தெரிவிக்கையில், முன்னர் வெள்ள நிலமையின் போது அடித்து வரப்பட்ட கழிவுகள் கங்கந்த பாடசாலைக்கு அருகில் பாலத்திற்க கீழ் உள்ளன என்றும், மீண்டும் மழை காலத்தில் இந்த கழிவுகளை அப்புறப்படுத்தாவிட்டால் மீண்டும் வெள்ள நிலமைக்கு முகம் கொடுக்க நேரிடும் என்பதால் இந்த கழிவுகளை விரைவாக அப்புறப்படுத்தி தருமாறு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. எம். சுலாரி சந்தரேகா அவர்கள் கேட்டுக் கொண்டார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த பிரேரணை முன்வைக்கப்பட்டது கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் திரு. சுனில் இராஜபக்ச அவர்களின் வேண்டுகோலுக்கு இணங்க ஆகும் என்று கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 4**

அனர்த்தங்களுக்கு முன் தயார் ஆகுவதற்கு அனர்த்த முகாமை நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு கீழ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அங்கத்தவர்களைக் கொண்ட இடர் முகாமை கமிட்டி ஒன்றை நியமிப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

| | |
|---|---|
| பிரதேச செயலகம் | - பிரதேச செயலாளர் |
| | - நிர்வாக கிராம உத்தியோகத்தர் |
| | - இடர் முகாமை உத்தியோகத்தர் |
| கஹவத்த கெல்மதுள்ள போலீஸ் | - பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர் |
| பொல்மதுள்ள பிரதேச சபை | - செயலாளர் |
| | - கௌ.பி.ச.உ. திரு. பி. நிசாந்த குமார புத்தாரச்சி |
| | - கௌ.பி.ச.உ. திரு. எச்.எம். சரத் உஷான் மஹனாம |
| | - கௌ.பி.ச.உ. திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன |
| | - கௌ.பி.ச.உ. திரு. டப்.அயி.யு. குமார குணவர்தன, |
| | - கௌ.பி.ச.உ. திரு. எஸ்.எ.எஸ்.எஸ். அமரசேகர |
| | - கௌ.பி.ச.உ. திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக |
| | - கௌ.பி.ச.உ. திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க |
| | - கௌ.பி.ச.உ. திரு. திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அபேவர்தன |
| | - கௌ.பி.ச.உ. திரு. கே.ஜீ.சீ. ஜயரத்ன |
| | - கௌ.பி.ச.உ. திரு. ஏ.எப்.ஜே. சேனாரத்ன |
| | - கௌ.பி.ச.உ. திருமதி. டப்.எம்.எஸ். வீரசேகர |
| | - கௌ.பி.ச.உ. திரு. டப்.ஏ.ஜீ. புஸ்பகுமார |
| | - கௌ.பி.ச.உ. திரு. ரீ.கே.எஸ். சிறிசாந்த |
| | - கௌ.பி.ச.உ. திரு. ஏ.எம்.ஏ.எம்.ஏ.அயி.எஸ். அவகியவன்ன |
| | - கௌ.பி.ச.உ. திரு. ஆர். திசோக் |
| | - கௌ.பி.ச.உ. திரு. ஆர்.எல்.அயி.ஜீ. லியனகே |

- கௌ.பி.ச.உ. திரு. சுசன்த பிரேமகுமார
- பிரதான முகாமைத்தவ சேவை உத்தியோகத்தர்
- இடர் முகாமை விடய உத்தியோகத்தர்
- திரு. தே.ஜே. உபனந்த
- திரு. ரீ.டி.கே. பெரேரா

05. அரச நிர்வாக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு உள்ளூராட்சி மன்றங்களில் சிறிய பாலங்கள் அபிவிருத்தி செய்யும் திடமான திட்டம் - 2026 தலைப்பின் கீழ், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்திற்காக மதிப்பீடு கோரப்பட்டு உள்ளது.

- குட்டபிட்டிய வத்தே பங்கு பாலம் - ம.பெ. ரூ. 19,320,000.00

இந்த பாலம் தொடர்பான அபிவிருத்தி பணிகளுக்கான பொது சபை அனுமதி பெற்றுக்கொள்வதற்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 5**

அரச நிர்வாக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு உள்ளூராட்சி மன்றங்களில் சிறிய பாலங்கள் அபிவிருத்தி செய்யும் திடமான திட்டம் - 2026 தலைப்பின் கீழ், கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்திற்காக மதிப்பீடு கோரப்பட்டு உள்ளது.

- குட்டபிட்டிய வத்தே பங்கு பாலம் - ம.பெ. ரூ. 19,320,000.00

முன்வைக்கப்பட்டு உள்ள சந்தை விலைகளில் மாற்றங்கள் காரணமாக ரூ. 20,650,000.00 தொகைக்கு திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கு அமைய இந்த பாலத்தை நிர்மானிப்பது தொடர்பில் அனுமதி வழங்குவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

06. 2025 ஆம் ஆண்டில் பிரதான அமைச்சின் நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டு உள்ள திட்டங்கள் தொடர்பில் உரிய பில்களுக்கு காசோலைகள் பெறப்பட்டு உள்ளன. அந்த காசோலைகளுக்கான உரிய தொகையை ஒப்பந்ததாரர்களுக்கு தழுவ அனுமதி அடிப்படையில் பணம் செலுத்தப்பட்டது. அந்த கொடுப்பனவுகளுக்காக பொது சபை அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக முன்வைக்கின்றேன்.

- கெடேதென்ன கழிவு முகாமை நிலையத்தின் வடிகால் தொகுதியை அபிவிருத்தி செய்தல். ரூ. 1,045,989.85 (ஒப்பந்ததாரர், இரன்பிம கமநல சங்கம், பனாவென்ன, கஹவத்தை)
- பண்டாரவத்த தெனவக இணைக்கும் வீதியில் திரு.ஆரோன்சிங்ஞோ வீட்டின் அருகில் இருந்து தெனவக பாதகட வீதியின் எஞ்சிய பகுதியை அபிவிருத்தி செய்தல் - ரூ. 1,262,136.23
( ஒப்பந்ததாரர், தெனவக எக்சத் அவமங்கல்யாதார சங்கம் , தெனவக போதிய வளாகம், தெனவக, கனேகம)
- மாகாண வீதி அபிவிருத்தி கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் முற்பணங்கள் அனுமதி பெறப்பட்டு ஹோனகும்புற சந்தியில் இருந்து எதுகல வரையிலான வீதியை நிர்மானித்தல் - ரூ. 1,708,498.89 (ஒப்பந்ததாரர், ஹோனகும்புற சுஹத சங்சதய)

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 06**

2025 ஆம் ஆண்டில் பிரதான அமைச்சின் நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டு உள்ள திட்டங்கள் தொடர்பில் உரிய பணம் ஒப்பந்ததாரர்களுக்கு தழுவ அனுமதி அடிப்படையில் செலுத்தப்பட்டது. அந்த கொடுப்பணவுகள் தொடர்பாக அனுமதி வழங்குவது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

- கெடேதென்ன கழிவு முகாமை நிலையத்தின் வடிகால் தொகுதியை அபிவிருத்தி செய்தல். ரூ. 1,045,989.85 (ஒப்பந்ததாரர், இரன்பிம கமநல சங்கம், பனாவென்ன, கஹவத்தை)
- பண்டாரவத்த தெனவக இணைக்கும் வீதியில் திரு.ஆரோன்சிங்ஞோ வீட்டின் அருகில் இருந்து தெனவக பாதகட வீதியின் எஞ்சிய பகுதியை அபிவிருத்தி செய்தல் - ரூ. 1,262,136.23
( ஒப்பந்ததாரர், தெனவக எக்சத் அவமங்கல்யாதார சங்கம் , தெனவக போதிய வளாகம், தெனவக, கனேகம)
- மாகாண வீதி அபிவிருத்தி கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சின் முற்பணங்கள் அனுமதி பெறப்பட்டு ஹோனகும்புற சந்தியில் இருந்து எதுகல வரையிலான வீதியை நிர்மானித்தல் - ரூ. 1,708,498.89 (ஒப்பந்ததாரர், ஹோனகும்புற சுஹத சங்சதய)

07. பொது வியாபார தொகுதியில் இலக்கம் 14 மீன் கடை அறை 2026 ஆம் ஆண்டிற்காக குத்தகைக்கு விடுவது தொடர்பாக 2026.03.13 ஆம் திகதி நடைபெற்ற கொள்முதல் கமிட்டி கூட்டத்தில் முடிவு ஒன்று எடுக்கப்பட்டது அத்துடன் அக் கமிட்டி அறிக்கை உகந்த முடிவு ஒன்றை எடுப்பதற்கு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், கடந்த அதாவது 2026.02.11 ஆம் திகதி பொது சபை கூட்ட முடிவு மூலம் மீன் கடை அறை தொடர்பாக முடிவு ஒன்றை எடுப்பதற்கு கொள்முதல் கமிட்டிக்கு முன்வைக்கப்பட்டது என்றும், அங்கே 2026.03.13 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு 06 உறுப்பினர்களுடன் கூடிய கொள்முதல் கமிட்டி கூட்டம் தொடங்கியது என்றும், அதன் அடிப்படையில் விலை மனுக்கள் மீண்டும் ஆராய்ந்து சில பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன என்றும், சிறிய அசாதாரன நிலை ஒன்று காணப்பட்டதால் முதலாம் கொள்வனவாளர் நிராகரித்து உள்ளதாகவும், இறுதி கொள்வனவாளர் ரூ. 471,999.00 தொகை முன்வைத்து உள்ளதாகவும், எப்படி இருப்பினும் இறுதியில் ரூ. 471,999.00 தொகை முன்வைத்த கொள்வனவாளருக்கு கடை அறை செல்வது போல் தோன்றுவதாகவும், பழைய ஆவணங்கள் பரிசீலனை செய்த போது கடந்த காலங்களிலும் இதுவே நடைபெற்று உள்ளதாக தெளிவாக தெரிவதாகவும், அதனால் கொள்முதல் கோவை 1.5.2 பந்தியில் (இ) குற்றம் புரிவதற்கு சதி செய்தல் நடவடிக்கையின் கீழ் இந்த நபர்கள் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்டு உள்ளனர் என்பது தெளிவாக தெரிவதால் அதனால் இது ஒரு குற்றம் புரிவதற்கு சதி செய்தல் என்பது அவதானிக்கப்பட்டது என்றும், பிரதேச சபையின் செத்துக்களில் இருந்து உண்மையான மற்றும் சாதாரண ஆகக்கூடிய தொகை வருமானமாக பெற்றுக்கொள்வது எங்கள் அனைவரினதும் கடமை என்றும், அதனால் அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து பார்த்து கொள்முதல் கமிட்டி இந்த ஒரு குற்றம் புரிவதற்கு

சதி செய்தல் கீழ் விலைமனு கோரல் பத்திரங்களை நிராகரிப்பதற்கும், இதற்கு முன் அதாவது 2026.02.11 ஆம் திகதி நடைபெற்ற மாதாந்த பொதுக் கூட்டத்தில் முடிவுகள் இலக்கம் 13 இன் கீழ் எடுக்கப்பட்ட முடிவானது அதாவது பொது வியாபார தொகுதியில் இலக்கம் 14 மீன் கடை அறை மீண்டும் டெண்டர் விடுவது உகந்தது என்று மாதாந்த பொதுக் கூட்ட முடிவை அதேபோல் நடைமுறைப்படுத்துவது உகந்தது என்று 2026.03.13 ஆம் திகதி பி.ப. 02.00 மணிக்கு நடைபெற்ற பெல்மதுள்ள பிரதேச சபையின் கொள்முதல் கமிட்டி கூட்டத்தில் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 07**

2026.03.13 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு நடைபெற்ற கொள்முதல் கமிட்டி வழங்கிய பரிந்தரைகளுக்கு ஏற்ப பொது வியாபார தொகுதியில் இலக்கம் 14 மீன் கடை அறை 2026 ஆம் அண்டிற்காக குத்தகைக்கு மீண்டும் விடுவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

08. பெல்மதுள்ள பிரதேச சபைக்கு சொந்தமாக கஹவத்த பொது மலசலகூடம் பிரதேச சபை நிதியில் புனர்நிர்மாணம் செய்து நீர் மற்றும் மின்சார வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்து டென்டர் விடுவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 08**

பெல்மதுள்ள பிரதேச சபைக்கு சொந்தமாக கஹவத்த பொது மலசலகூடம் பிரதேச சபை நிதியில் புனர்நிர்மாணம் செய்து நீர் மற்றும் மின்சார வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்து டென்டர் விடுவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

09. சப்ரகமுவ மாகான பிரதான அமைச்சின் செயலாளரின் CM/DE/16/EST/2026 மற்றும் 2026.03.20 ஆம் திகதியுடைய கடிதம் ( உள்ளூராட்சி மன்ற வீதிகள் - இரத்தரினபுரி மாவட்டம் விலைமனு கோரல் 2026) ஏற்ப கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 03 திட்டங்களுக்கான முற்பணங்கள் ஒதுக்குவதற்கு தீர்மாணிக்கப்பட்டு உள்ளது என்று எனக்கு அறியத்தரப்பட்டுள்ளது.

1) முல்லகந்த அம்பிட்டிய வீதியை கொங்கிறீட் இடல் - வெலிமலுவ கிராம உத்தியோகத்தர் பிரிவு - ரூ. 02.00 மில்லியன்
2) சமனலகம வீதியை அபிவிருத்தி செய்தல் - பாதகட கிராம உத்தியோகத்தர் பிரிவு - ரூ. 01.5 மில்லியன்
3) இஹல போபிட்டிய 10 ஏக்கர் வீதியை கொங்கிறீட் இடல் - இஹல போபிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவு - ரூ. 01.00 மில்லியன்

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 09**

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளை அனுமதிப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

1) முல்லகந்த அம்பிட்டிய வீதியை கொங்கிறீட் இடல் - வெலிமலுவ கிராம உத்தியோகத்தர் பிரிவு - ரூ. 02.00 மில்லியன்
2) சமனலகம வீதியை அபிவிருத்தி செய்தல் - பாதகட கிராம உத்தியோகத்தர் பிரிவு - ரூ. 01.5 மில்லியன்
3) இஹல போபிட்டிய 10 ஏக்கர் வீதியை கொங்கிறீட் இடல் - இஹல போபிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவு - ரூ. 01.00 மில்லியன்

10. சப்ரகமுவ மாகான பிரதான அமைச்சின் செயலாளரின் CM/DE/05/PSDG/2026 மற்றும் 2026.03.20 ஆம் திகதியுடைய கடிதத்திற்கு ஏற்ப (உள்ளூராட்சி மன்ற பொது வசதிகள்) விலைமனு கோரல் 2026 (இரத்தரினபுரி மாவட்டம்) பெல்மதுள்ள பிரதேச சபையின் வீதி பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக முன்கூட்டிய கலவை நிலையம் (PREMIX YARD) ஒன்றை நிர்மாணிப்பதற்கு முற்பணங்கள் ஒதுக்குவதற்கு தீர்மாணிக்கப்பட்டு உள்ளது என்று எனக்கு அறியத்தரப்பட்டுள்ளது. (ரூ. 1.80 மில்லியன் கெடேதென்ன கழிவு முகாமை நிலையம்) அந்த பிரேரணைக்கு ஏற்ப (Construction of Ketethanna premix yard) இற்கு ரூ. 1.8 மில்லியன் பெருமதியான மதிப்பீட்டை அனுமதிக்காக முன்வைக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், கடந்த வரவுசெலவு திட்டத்தில் இந்த அபிவிருத்திப் பணி தொடர்பாக ரூ. 04 மில்லியன் ஒதுக்கப்பட்டு உள்ளது என்றும், செயலாளர் மூலம் மேலும் ரூ. 1.8 மில்லியன் முற்பணம் பிரதேச சபைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டு உள்ளது என்றும், அதன் அடிப்படையில் ரூ. 58 இலட்சம் நிதி மூலதனத்துடன் PREMIX YARD இற்கு ஆரம்பம் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கும், பிரதேச சபையின் கீழ் செயல்படும் இந்த சேவை மூலம் வீதிகளில் காணப்படும் சிறு சிறு பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு முடியும். கழிவு முகாமை நிலையத்தில் களப் பரிசேதனை மேற்கொண்டதாகவும், கழிவு முகாமை நிலையத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள பகுதியில் இதை நிறுவுவதற்கு இயலுமை உள்ளதா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்றும் கௌரவ தலைவர் திரு. எம்.ஜீ.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், கழிவு முகாமை நிலையத்தில் இந்த விடயம் தொடர்பாக போதியளவு இடவசதி காணப்படுகிறதா, இல்லை என்றால் ஒரு பகுதி காணியை கைப்பற்றுவதற்கு இயலுமை காணப்படுகிறதா என்று ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசனாயக அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், PREMIX YARD ஐ தகனசாலை வளாகத்தில் ஒரு பகுதியில் நிர்மாணிப்பது உகந்தது என்றும், இந்த இடத்தில் இந்த அபிவிருத்திப் பணியை மேற்கொண்டால் இந்த இடத்திற்கு பாதுகாப்பு கெமராக்கள் பொருத்துவதற்கும், பொருட்கள் பொக்குவரத்து, பொருட்கள் தொடர்பில் பொறுப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்ச்சியாக ஆராய முடியும் என்றும், கழிவு முகாமை நிலையத்தை விட தகனசாலை வளாகம் இந்த அபிவிருத்தி பணிக்கு உகந்த இடம் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், தகனசாலை வளாகத்தில் பொருமளவு இடவசதி காணப்படுவதாகவும் முன்னர் இருந்த முன்கூட்டிய தார் கலவை நிலையம் இந்த இடத்தலே இருந்ததாகவும், இந்த இடம் தற்போது காடு மண்டி காணப்படுவதாகவும், நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் இடம் மற்றும் பூதவுடல்கள் புதைப்பதற்கு பயன்படுத்தும் இடங்களை தவிர்த்து எஞ்சிய பகுதியில் முன்கூட்டிய கலவை நிலையம் ஒன்றை நிர்மாணிப்பது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், தகனசாலை வளாகத்தில் மயானபூமியாக பயன்படுத்துப் பகுதியை 3-4 அடி மதில் சுவர் ஒன்றை அமைத்து மண் நிரப்பி பயன்படுத்துவதன் மூலம் முன்கூட்டிய கலவை நிலையம் மற்றும் இறுதிக் கிரியை விழா மண்டபம் நிர்மாணிப்பதற்கு இடவசதிகள் எஞ்சும் என்றும், மண் நிரப்பி பக்க மதில் சுவர் ஒன்றை நிர்மாணித்து அனைத்து நிர்மாணப் பணிகளையும் மேற்கொள்வது உகந்தது என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.பீ. சான்த குமார குடாவத்த அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 10**

பெல்மதுள்ள பிரதேச சபையின் வீதி பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக முன்கூட்டிய கலவை நிலையம் (PREMIX YARD) ஒன்றை நிர்மாணிப்பதற்கு தயாரிக்கப்பட்ட ரூ. 1.80 மில்லியன் பெருமதியான மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்குவதற்கும், பழைய முன்கூட்டிய தார் கலவை நிலையம் இருந்த இடத்தில் (கல்லேபிட்ட தகனசாலை வளாகம்) முன்கூட்டிய கலவை நிலையத்தை (PREMIX YARD) நிர்மாணிப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

11. சப்ரகமுவ மாகான பிரதான அமைச்சின் செயலாளரின் CM/DE/08/26/ESS/01 மற்றும் 2026.03.02 ஆம் திகதியுடைய கடிதத்திற்கு ஏற்ப ( தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் தொகுப்பு - விலைமனு கோரல் 2026) கீழ் பெல்மதுள்ள பிரதேச சபைக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 02 திட்டங்களுக்கான முற்பணங்கள் ஒதுக்குவதற்கு தீர்மாணிக்கப்பட்டு உள்ளது என்று எனக்கு அறியத்தரப்பட்டுள்ளது.

1. Concreting of road church to shop in no.06 division panawenna - ரூ. 1.3 மில்லியன்
2. Concreting of road from Nataraj to kanavinna road pelmadulla - ரூ. 1.3 மில்லியன்

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமநாயக அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 11**

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளை அனுமதிப்பது உகந்தது என்று ஏகமனதாக சபையில் நிறைவேற்றப்பட்டது.

1. Concreting of road church to shop in no.06 division panawenna - ரூ. 1.3 மில்லியன்
2. Concreting of road from Nataraj to kanavinna road pelmadulla - ரூ. 1.3 மில்லியன்

12. பிரதேச செயலகத்தின் PLDS/PLD/09/கிராமிய பாலங்கள்/MAIN/2026 மற்றும் 2026.03.24 ஆம் திகதியுடைய கடிதத்தின் மூலம் பெல்மதுள்ள பிரதேச செயலக கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அதிவிருத்தி செய்வதற்கு உள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிராமிய பாலங்களை அபிவிருத்தி செய்வதற்கு இணக்கம் மற்றும் அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு கௌரவ சபைக்கு முன்வைக்கின்றேன்.

1. தேவாலெகம - கடதொரகந்த வீதியில் நெதுன் தொல குருக்காக பாலம் நிர்மாணித்தல்
2. தேவாலெகம - இஹலவத்தட போகும் வீதியில் ஹொரகஸ்துன அருகில் ஓடைக்கு குருக்காக பாலம் நிர்மாணித்தல்
3. திப்பிடிகல - பொல்தென்ன வீதியில் எகொடவத்த ஓடைக்கு குருக்காக திரு. ரீ.கே. பியதாச வீட்டிற்கு அருகில் பாலம் நிர்மாணித்தல்
4. திப்பிடடில - எகொடவத்த ஓடைக்கு குருக்காக திரு. பத்மசிறி வீட்டிற்கு அருகில் பாலம் நிர்மாணித்தல்

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப். ஏ. கயான் புஸ்பகுமார அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 12**

பெல்மதுள்ள பிரதேச செயலக கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அபிவிருத்தி செய்வதற்கு உள்ள மேழே குறிப்பிடப்பட்டுள்ள கிராமிய பாலங்கள் அபிவிருத்தி செய்வதற்கு இணக்கத்தை வழங்குவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**ii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக்க அவர்களின் பிரேரணைகள்**

13. பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் அல்லது பிரதேச சபை ஊழியர் ஒருவரின் கிட்டிய உறவினர் ஒருவரின் இறுதி கிரியை நிதழ்வின் போது பிரதேச சபையின் கூடுதலான அவதானம் செலுத்தி ஒத்தழைப்பு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வது உகந்தது பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமநாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 13**

இது தொடர்பாக பொது சபை முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

**iii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. ரீ. சிறியாணி ஜானகி பீரிஸ் அவர்களின் பிரேரணைகள்**

14. பல்லெகம்கொட வீதியில் வன்னிஆரச்சிகம வரையிலான வீதியை பெகோ இயந்திரம் பயன்படுத்தி திருத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 14**

தற்போது காணப்படும் எரிபொருள் பிரச்சினைகள் தீர்ந்த பின்னர் முன்னுரிமை அடிப்படையில் பொது வேலை திட்டங்களுக்கு பெகோ இயந்திரத்தை வழங்குவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

15. வன்னிஆரச்சிகமவில் இருந்து ஈரியன்தழுவ வீதியில் ஹல்லின்ன வத்த அருகில் பெகோ இயந்திரம் பயன்படுத்தி திருத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 15**

தற்போது காணப்படும் எரிபொருள் பிரச்சினைகள் தீர்ந்த பின்னர் முன்னுரிமை அடிப்படையில் பொது வேலை திட்டங்களுக்கு பெகோ இயந்திரத்தை வழங்குவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

16. வன்னிஆரச்சிகமவில் இருந்து படலந்த வீதியையில் 1 கி.மீ. வரை திருத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 16**

தற்போது காணப்படும் எரிபொருள் பிரச்சினைகள் தீர்ந்த பின்னர் முன்னுரிமை அடிப்படையில் பொது வேலை திட்டங்களுக்கு பெகோ இயந்திரத்தை வழங்குவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

17. வன்னிஆரச்சிகம இலக்கம் 05 வீட்டின் அருகில் இருந்து திரு. இஹல மதுர வீட்டின் அருகில் வரையிலான வீதியை பெகோ இயந்திரம் பயன்படுத்தி திருத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 17**

தற்போது காணப்படும் எரிபொருள் பிரச்சினைகள் தீர்ந்த பின்னர் முன்னுரிமை அடிப்படையில் பொது வேலை திட்டங்களுக்கு பெகோ இயந்திரத்தை வழங்குவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

18. பொரால வீதியில் நாகேல்ல வரையிலாக வீதியை பெகோ இயந்திரம் பயன்படுத்தி திருத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 18**

தற்போது காணப்படும் எரிபொருள் பிரச்சினைகள் தீர்ந்த பின்னர் முன்னுரிமை அடிப்படையில் பொது வேலை திட்டங்களுக்கு பெகோ இயந்திரத்தை வழங்குவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

19. பண்டாரநாயகபுர வீதியில் 100 மீற்றர் வரை பெகோ இயந்திரம் பயன்படுத்தி திருத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 19**

தற்போது காணப்படும் எரிபொருள் பிரச்சினைகள் தீர்ந்த பின்னர் முன்னுரிமை அடிப்படையில் பொது வேலை திட்டங்களுக்கு பெகோ இயந்திரத்தை வழங்குவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

20. பண்டாரநாயகபுர பிரதான வீதியில் இடத்திற்கு இடம் போக்குவரத்து செய்ய முடியாத இடங்களை பெகோ இயந்திரம் பயன்படுத்தி திருத்துவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 20**

தற்போது காணப்படும் எரிபொருள் பிரச்சினைகள் தீர்ந்த பின்னர் முன்னுரிமை அடிப்படையில் பொது வேலை திட்டங்களுக்கு பெகோ இயந்திரத்தை வழங்குவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**iv. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.டி. ருவன் சானக பியரத்ன அவர்களின் பிரேரணைகள்**

21. இலக்கம் 180/A நிரல்கம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள தேசிய பெருந்தோட்ட அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பரகெடிய வத்த, பரகெடிய என்ற ஊரில் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானம் தேசிய பெருந்தோட்ட அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணியில் அமைந்துள்ளது என்பதால் தற்போது அந்த தோட்ட பகுதிகள் குத்தகை அடிப்படையில் தனியார் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளன என்பதால் 50 வருடங்களை விட பழைய விளையாட்டு மைதானம் இல்லாமல் போகும் துரதிஷ்டமான அபாய நிலை தற்போது ஏற்பட்டு உள்ளது இதனால் இதை இந்த அவதானத்தில் இருந்து விளக்கிக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமநாயக அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 21**

இலக்கம் 180/A நிரல்கம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள தேசிய பெருந்தோட்ட அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான பரகெடிய வத்த, பரகெடிய என்ற ஊரில் அமைந்துள்ள பொது விளையாட்டு மைதானம் தேசிய பெருந்தோட்ட அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணியில் அமைந்துள்ளது என்பதால் தற்போது அந்த தோட்ட பகுதிகள் குத்தகை அடிப்படையில் தனியார் பண்ணையாளர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளன என்பதால் 50 வருடங்களை விட பழைய விளையாட்டு மைதானம் இல்லாமல் போகும் துரதிஷ்டமான அபாய நிலை தற்போது ஏற்பட்டு உள்ளது இதனால் இதை இந்த அவதானத்தில் இருந்து விளக்கிக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரப்பட்ட கோரிக்கையை பிரதேச இணைப்புக் கமிட்டி கூட்டத்திற்கு முன்வைப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**v. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எஸ்.ஏ. சுகத் சான்த அமரசேகர அவர்களின் பிரேரணைகள்**

22. பெல்மதுள்ள பிரதேச சபை கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் வாழும் அதிகளவிலான மக்கள் தமது வாழ்வாதாரத்தை கொண்டு செல்வதற்கு ஆதாரமாக மாணிக்கக் கல் அகழ்வை கொண்டுள்ளனர். வே ஆற்றை அடிப்படையாகக் கொண்டு இந்த தொழிலில் ஈடுபடும் அதிகமானோர் தற்போது காணப்படும் சட்ட நிலமை காரணமாக அதிக அளவிலான அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். புது வருடப்பிறப்பை முன்னிட்டு செலவுகள் அதிகம் ஏற்படும் காலம் என்பதால் இவர்களுக்கு மாணிக்கக் கல் அகழ்வு தொழிலில் ஈடுபடுவதற்கு இந்த கால எல்லையினுள் ஏதேனும் சலுகை பெற்றுக்கொடுக்க முடியும் என்றால் அது மிகவும் பெருமதியானது ஆகும். அதனால் தற்போதைய அரசை தெளிவுபடுத்தி இவர்களுக்கு இது தொடர்பாக ஏதெனும் சலுகை பெற்றுக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப். இந்திக உதய குமார குணவர்தன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 22**

இது தொடர்பாக பிரதேச இணைப்புக் கமிட்டி கூட்டத்தில் ஆழமாக கலந்தாலோசிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்று கௌரவ சபைக்கு தெரிவிக்கப்பட்டது.

**vi. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. வெரஞ்சா காமினி விஜேரத்ன அவர்களின் பிரேரணைகள்**

23. ரில்ஹேன மிதுரோ வீதியில் வீதி மின் விளக்குகள் 10 இற்கு மின்குமிழ்கள் பெற்றுக் கொடுக்குமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 23**

வருங்காலத்தில் வீதி மின் விளக்குகள் பெற்றுக்கொடுப்பது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

24. பெல்மதுள்ள ரில்ஹேன கிராம உத்தியோகத்தர் பிரிவில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோருக்கு அலுவலகங்கள் அமைப்பதற்கு இடம் இல்லாததன் காரனத்தினால் சனசமூக நிலையம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமநாயக்க அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், இந்த பல்நோக்கு கட்டிடத்தை நிர்மாணிக்கும் போது இடவசதி காணப்படுமானால் சமுர்தி சங்கங்களில் உள்ள நிதி பொது தேவை ஒன்றிற்கு பயன்படுத்த முடியும் என்றும், இந்த நிதியை பயன்படுத்தி அலுவலக கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு இயலுமை காணப்படுவதாகவும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. ரீ. சிறியானி ஜானகி பீரிஸ் அவர்கள் தெரிவித்தார்.

**முடிவுகள் இலக்கம் 24**

பெல்மதுள்ள முழு கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பல்நோக்கு கட்டிடங்களின் தேவைகளை இணங்கண்டு உள்ளதாகவும், தற்போது அரசினால் பகுதியளவு புனர்நிர்மாணம் செய்ய வேண்டிய பல்நோக்கு கட்டிடங்களை புனர்நிர்மாணம் செய்து வருவதாகவும், புதிதாக பல்நோக்கு கட்டிடங்கள் இந்த வருடத்தில் நிர்மாணிக்கப்பட மாட்டாது என்றும், எதிர்வரும் வருடத்தில் பல்நோக்கு கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கு அரசினால் நிதி ஒதுக்கங்கள் செய்யப்படும் என்று கௌரவ சபைக்கு தெரிவிக்கப்பட்டது.

**vii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.வீ. நிர்மிக தீபால் அவர்களின் பிரேரணைகள்**

25. மாரபன தெற்கு திரு. விஜித உக்வத்த அவர்களின் வீட்டிற்கு அருகில் கஹவிடியாகொடையிற்கு செல்லும் வீதி பள்ளங்கள் நிறைந்த வீதி என்பதால் இரும்பு குழாய்கள் பயன்படுத்தி வேலி ஒன்றை அமைத்துத் தருமாறு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே.பீ. சந்திரலால் ஜயரத்ன அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 25**

களப் பரிசோதனை செய்யப்பட்டு பெறப்படும் பரிந்துரைகளுக்கு அமைய இது தொடர்பாக பிரதேச சபையின் நிதியில் இருந்து ஒதுக்குவதற்கு முடியுமா என்று ஆராய்ந்து பார்ப்பதற்கும், அதுபோல் செய்ய இயலுமை இல்லை என்றால் உரிய நிறுவனங்களுக்கு அனுப்புவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**viii. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப்.ஏ. கயான் புஸ்பகுமார அவர்களின் பிரேரணைகள்**

26. பெல்மதுள்ள வார சந்தையின் மலசலகூடத்தை புதுவருட தினங்களில் பயன்பாட்டிற்கு உகந்த விதத்தில் புனர்நிர்மாணம் செய்து, பிரதேச சபையின் ஊழியர் ஒருவரை ஈடுபடுத்தி அதை பயன்படுத்தும் நபர்களிடம் இருந்து கட்டணம் அறவிட்டுக் கொள்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 26**

பெல்மதுள்ள வார சந்தையின் மலசலகூடத்தை புதுவருட தினங்களில் பயன்பாட்டிற்கு உகந்த விதத்தில் புனர்நிர்மாணம் செய்து, பிரதேச சபையின் ஊழியர் ஒருவரை ஈடுபடுத்தி அதை பயன்படுத்தும் நபர்களிடம் இருந்து கட்டணம் அறவிட்டுக் கொள்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

27. கழிவு முகாமை நிலையத்தின் கூரையில் இத்துப்போய் உள்ள பகுதியை புனர்நிர்மாணம் செய்வதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஆர்.எல். இந்திக கயான் லியனகே அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 27**

கழிவு முகாமை நிலையத்தின் கூரையில் இத்துப்போய் உள்ள பகுதியை புனர்நிர்மாணம் செய்வது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், வார சந்தை அருகில் உள்ள மலசலகூடத்தை புனர்நிர்மாணம் செய்வது மிகவும் உகந்த பிரேரணை என்றும், புதுவருட தினங்களில் பிரசார நடவடிக்கைகளுக்காக கடந்த கூட்டத்தில் பிரதேச சபையின் ஊடாக டென்டர் விடுவது உகந்தது என்று முடிவு எடுத்த போதிலும் அதை வியாபார சங்கத்திற்கு வழங்கியது மற்றும் வியாபார சங்கம் அதை பெற்றுக்கொள்ளாததன் காரணத்தினால் பிரதேச சபைக்கு வரவேண்டிய வருமானம் இல்லாமல் போனது என்றும், ஆனாலும் வியாபார சங்கத்திற்கு வழங்குவோம் என்று கூறியதாகவும், அதற்கு காரணம், வியாபார சங்கம் பிரதேச சபைக்கு தொடர்ச்சியாக ஒத்துழைப்பு வழங்குவது ஆகும் என்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. கே. சுசன்த பிரேமகுமார அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், டென்டர் முறைக்கு செல்லாமல் வியாபார சங்கத்திற்கு வழங்குவதற்கு முடிவு எடுக்கப்பட்டது, வியாபார சங்கம் மற்றும் பிரதேச சபைக்க இடையே அன்னியோன்னிய தொடர்புகளை மேலும் வளர்த்துக் கொள்வதற்கு என்றும் அவர்கள் அந்த நம்பிக்கையை உடைத்து உள்ளனர் என்றும், அதனால் பிரதேச சபைக்கு கிடைக்க இருந்த வருமானம் இல்லாமல் போனது என்றும், இதை ஒரு பாடமாக கருதி வருங்காலத்தில் டென்டர் விடுவது உகந்தது என்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. பி. நிசான்த குமார புத்தாரச்சி அவர்கள் தெரிவித்தார்.

**ix. கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன அவர்களின் பிரேரணைகள்**

28. மொரதொட "நிமல் இரணவிரு" வீதியில் உள்ள, வீதிக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடியதாக உள்ள அரச மரத்தை அகற்றுவதற்கு பிரேரிக்கின்றேன்.

மேற்கூறிய பிரேரணை கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர அவர்களினால் ஆமோதிக்கப்பட்டது.

**முடிவுகள் இலக்கம் 28**

களப் பரிசோதனை மேற்கொண்டு பெறப்படும் பரிந்தரைகளுக்கு ஏற்ப, இந்த அரச மரம் பிரதேச சபை வீதியில் பொதுமக்களுக்கு மற்றும் வீதிக்கு பாதிப்பு ஏற்படுத் நிலை காணப்படுமாயின் பிரதேச சபையின் செலவில் இந்த அரச மரத்தை அகற்றுவது உகந்தது என்று சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கருத்து தெரிவிக்கையில், கமிட்டி என்ற ரீதியில் களப் பரிசோதனை மேற்கொண்டு வார சந்தை மலசலகூடத்தை டென்டர் விடுவதற்கும் மற்றும் பெயர்ப் பலகை ஒன்று பொருத்துவதற்கு பரிந்துரைகள் வழங்கப்பட்டு இருந்த போதிலும் அது நடைமுறைப்படுத்தப்படவில்லை. மேலும் இந்த 13 ஆம் பிரேரணை தொடர்பாக இணங்க முடியாது என்பது தனிப்பட்ட கருத்து என்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எம்.ஏ. இசுரு சம்பத் அலகியவன்ன அவர்கள் தெரிவித்தார்.
கருத்து தெரிவிக்கையில், இந்த 13 ஆம் பிரேரணை பிரதேச சபை உறுப்பினர்கள் அமைதியாக இருந்து அல்லது நிறைவேற்றப்படும் என்று நினைக்கவில்லை என்றும், இதுபோன்ற பிரேரனை ஒன்றிற்கு சபையில் அனுமதி வழங்கக் கூடாது. ஏனெனின் நாங்கள் வந்து இருப்பது பொதுமக்களுக்கு சேவை செய்வதற்கு என்றும், சாதாரண மக்களுக்கு இல்லாத வரப்பிரசாதங்கள் பெற்றுக்கொள்வதற்கு வரவில்லை என்றும், கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. எம்.ஏ. புஸ்பகுமார தனசேகர அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இந்த பிரேரணை மூலம் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்களுக்கு நிறுவனத்தின் ஊடாக நலன்புரி நடவடிக்கைகள் மேற்கொள்வது இந்த பிரேரணையின் மூலம் கருதியதாக கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. மஞ்சு டயஸ் விக்கிரமனாயக அவர்கள் தெரிவித்தார்.

பி.ப. 12.00 மணிக்கு கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. ரீ. சிறியானி ஜானகி பீரிஸ் மற்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திருமதி. ஆர். புவனேஸ்வரி ஆகியோர் கௌரவ சபையில் இருந்து வெளியேரினர்.

கருத்து தெரிவிக்கையில், நாங்கள் கிராம மக்களின் வாக்குகளைப் பெற்று பிரதேச சபைக்கு தெரிவாகி உள்ளோம், அத்துடன் அபிவிருத்தி பிரேரணைகளின் போது எந்த அரசினால் மேற்கொண்டாலும் நாங்கள் உதவி புரிந்து உள்ளோம். பிரதேச சபை உறுப்பினர்களுக்கு ரூ. 15,000.00 கொடுப்பனவானது அப்போது இருந்த உபதலைவர் கதைத்து ரூ. 8,000.00 தொகை சேர்த்து வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருந்தன என்றும், பிரதேச சபை உறுப்பினர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு, தொலைபேசி கொடுப்பனவு பெற்றுக்கொடுக்குமாறும், ஆகக் குறைந்தது தொலைபேசி கொடுப்பனவாக ரூ. 1,500.00 பொற்றுக்கொடுப்பது உகந்தது என்றும், எரிபொருள் கொடுப்பனவு எதிர்கட்சி உறுப்பினர்களுக்கு வழங்குவதற்கு வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்குமாறும், ஆளுநர் அவர்களை சந்திப்பதற்கு தானும் வருவதாகவும், இதை எதிர்கட்சி உறுப்பினர்களுக்கும் பெற்றுக்கொடுக்குமாறும் இது எங்களுடைய வரப்பிரசாதம் ஆகும் என்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எம். மஞ்சுல தசநாயக அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், இடர் நிலமைகளின் போது படகுகளின் தேவை ஏற்பட்டதாகவும், சங்கங்களில் உள்ள மற்றும் தன்னார்வு நிறுவனங்னளினால் வழங்கப்பட்ட படகுகளை இணங்கண்டு அவற்றை பிரதேச செயலகத்திற்கு, பிரதேச சபைக்கு அல்லது போலீஸ் நிலையத்திற்கு கையகப்படுத்துவதன் மூலம் அத்தியவசியமான நேரங்களில் எங்களுக்கு அவற்றை பயன்படுத்த முடியும் என்றும் கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.எப். ஜகத் சேனாரத்தின அவர்கள் தெரிவித்தார்.

கருத்து தெரிவிக்கையில், தனி நபர்களின் கைவசம் இருக்கும் படகுகள் தொடர்பான தகவல்கள் பிரதேச செயலகத்தில் ஆவணங்களில் உள்ளன என்றும், அந்த தகவல்களை பெற்றுக்கொண்டு அந்த படகுகளை உரிய இடங்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியுமானால் இந்த வேலைத்திட்டம் வெற்றிகரமானது என்றும், வே ஆற்றுக்கு குறுக்காக அல்லது கழு கங்கைக்கு குறுக்காக படகுகள் இயக்குவதற்கு இயலுமை உள்ள நபர்கள் இல்லாத பிரதேசங்கள் பிரதேச செயலகத்தில் ஆவணங்களில் உள்ளன என்றும், இது ஒரு பிரதான பிரச்சனை என்றும், இது தொடர்பாக உரிய திட்டம் ஒன்றை தயாரிக்க வேண்டும் என்று கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டப். இந்தின உதய குமார குணவர்தன அவர்கள் தெரிவித்தார்.

**07. செயற்பாட்டுக் குழுக்களின் அறிக்கைகள் முன்வைத்தல்கள் -**

2026.03.23 ஆம் திகதி நடைபெற்ற தொழிநுட்ப சேவைகள் செயற்பாட்டுக் குழுவின் கூட்ட அறிக்கை சபைக்கு முன்வைக்கப்பட்டது.

தொழிநுட்ப சேவைகள் செயற்பாட்டுக் குழுவின் மேம்பாட்டு கூட்டம் வருங்காலத்தில் நடைபெறும் என்று கௌரவ பிரதேச சபை தலைவர் திரு. எம்.ஜி.ஏ. தர்மசிறி மாணிபுற அவர்கள் தெரிவித்தார்.

**08. பெறுவனவுகள் மற்றும் செலவுகள் பற்றிய மாதாந்த அறிக்கை, திரட்டப்பட்ட மாதாந்த வருமானம் பற்றிய மேம்பாட்டு அறிக்கை கௌரவ சபைக்கு முன்வைத்தல்**

2026.02.01 ஆம் திகதியில் இருந்து 2026.02.28 ஆம் தகதி வரையிலான மாதத்திற்கு உரிய பிரதேச சபையின் கொடுப்பனவு அறிக்கை அனுமதி வழங்கல் மற்றும் பெறுவனவுகள் மற்றும் செலவுகள் பற்றிய மாதாந்த அறிக்கை, திரட்டப்பட்ட மாதாந்த வருமானம் பற்றிய மேம்பாட்டு அறிக்கை என்பன சபைக்கு முன்வைக்கப்பட்டன.

வேறு விடங்கள்

- பிரதேச சபை உறுப்பினர்களின் பிரத்தியோக தெளிவுபடுத்தல்கள்

**கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. டி.எல். யுரெஸ் லியனகே**

பிரதேச சபைக்கு சொந்தமான டென்டர் அடிப்படையில் வழங்கப்பட்ட கடை அறைகளில் இருக்கும் வியாபாரிகள் அவர்களின் டென்டர் கால எல்லை ஒரு வருடம் என்பதால் அது அவர்களின் வியாபார நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கு போதிய அளவிலான காலம் இல்லை என்பதால் அதை இன்னும் நீடித்து தருமாறு கேட்டுக் கொள்கிறேன். இது தொடர்பாக அவதானத்தை செலுத்துமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**கௌரவ பிரதேச சபை உறுப்பினர் திரு. ஏ.வீ. நிர்மிக தீபால்**

மாரபன பிரதேசம் வெள்ளப் அபாயத்தில் பாதிப்புக்கு உட்பட்ட போது அரசினால் வழங்கப்பட்ட படகுகள் தனிப்பட்ட நபர்கள் பயன்படுத்துவதால், இடர்களுக்கு உள்ளான பிரதேசங்களில் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு (உணவு, குடிநீர் பெற்றுக்கொடுத்தல், மற்றும் அவர்களை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லல்) போன்றவற்றிற்கு தேவையான படகுகளை பெற்றுக்கொடுப்பதில் இருந்து விலகி இருப்பதால் அந்த தேவை உரிய நேரத்தில் செய்துகொள்வதில் இடர்கள் ஏற்பட்டன. வழங்கப்பட்டுள்ள படகுகள் இடர் நிலமைகளின் போது பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமங்கள் ஏற்படுவதால் அது தொடர்பாக தேவையான சட்டரீதியான அல்லது இணக்கப்பாடுகள் மேற்கொள்வது உகந்தது ஆகும்.

- பிரதேச சபைத் தலைவரின் நன்றியுரை

இன்று பிரதேச சபைக் கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் கௌரவ எதிர்கட்சித் தலைவர் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கௌரவ தலைவர் தனது நன்றி உரையை முடித்துக் கொண்டார்.

பி.ப. 12.20 மணி அளவில் சபைக் கூட்டம் முடிவடைந்தது.

தலைவர்
பிரதேச சபை
பெல்மதுள்ள